

அ.தி.மு.க.வை சேர்ந்த வழக்கறிஞர் கே.ஜெ.ராஜேஷ், நேற்று (01.01.2026) அமைச்சர் தா.மோ. அன்பரசன், கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தார். உடன் ஆலந்தூர் தெற்கு பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி., ஏ.சாலமோன் எம்.சி., வட்ட கழக செயலாளர்கள் ஜெ. நடராஜன், ஏ.ஆர். சரவணா, மற்றும் கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி சிறப்புரை!

# பம்மல் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. – மேயர் க.வசந்தகுமாரி – துணை மேயர் கோ.காமராஜ் – அ.தமிழ்மாறன் பங்கேற்பு! த.ஜெயகுமார் நிகழ்ச்சி ஏற்பாடு!

சென்னை, ஜன.2-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி சார்பில் தமிழ்நாடு துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் விழா 03.01.2026, சனிக்கிழமை, மாலை 06.00 மணிக்கு குரோம்பேட்டை, திருநீர்மலை, நாகப்பா நகரில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் விளையாட்டு உபரகணங்கள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. (தாம்பரம் மாநகர செயலாளர்) தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பம்மல் மண்டல குழுத்தலைவர், வே.கருணாநிதி, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் இரா.நரேஷ்கண்ணா, பகுதி கழக நிர்வாகிகள் கே.சந்திரன், மு.ஸ்ரீதர், க.ஜெயசீலன்,

ஜி.பப்பிதா, ச.பிரபு, தாம்பரம் மாநகர பிரதிநிதிகள் சி.பார்த்தசாரதி இரா.குமரேசன், க.சுந்தரமூர்த்தி, இரா.பாபுஜி, வட்டக்கழக செயலாளர் ப.அன்பழகன், க.மோகன், மு.நி.தமிழ்குமரன், ப.ஆண்டவன், இ.பாலாஜி, டி.எம்.ஜோசப் மற்றும் மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் கலைவாணி பிரபு, வாணிஸ்ரீ விஜயகுமார், சித்ரா தமிழ்குமரன், சண்முகசுந்தரி ஜெயகுமார், சித்ராதேவி முரளிதரன், பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஞா.பிரபு, தாம்பரம் மாநகர மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆர்.முரளிதரன், ஆ. செந்தில்குமார், சி.பி.வினோத்குமார், பகுதி மாணவரணி அமைப்பாளர் பி.கார்த்திக் நன்றியுரை ஆற்றுவார்.

பகுதி செயலாளர் த.ஜெயகுமார் நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை செய்துள்ளார்.

### மயிலை த.வேலு எம்.எல்.ஏ. சிறப்புரை! என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி

# மயிலை மேற்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் - பி.எல்.ஏ.2 கூட்டம்!

### பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜன. 2-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை மேற்கு பகுதி திமுக சார்பில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ வட்டச் செயலாளர்கள் - BLA 2 ஆலோசனை கூட்டம் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. எனது தலைமையில் இன்று 2.1.2026 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் கே.பி.தாசன் ரோடு சமுதாய நலக் கூடத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த. வேலு எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

இதில் பகுதி கழக நிர்வாகிகள் ஜி ஆர்.ராஜேந்திரன், ஆர். எல் எல். வி. அசோக் குமார், பாக்கிய தாஸ், அகல்யா விஸ்வநாதன், ஜி.முருகையன், வட்ட கழக செயலாளர்கள். டி. ராஜவேலு, சீ. கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஆர்.ராஜா சுரேஷ்குமார், அ.நாகராஜன், மூ.இ. ஏழுமலை, மூ ராஜேந்திரன், நம் பகுதிக்குட்பட்ட அனைத்து (BLA 2 )பாக முகவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : (BLA 2 ) பாக முகவர்கள் (SIR) பணிகள் குறித்து, திராவிட பொங்கல் விழா மற்றும் கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு மயிலை மேற்கு பகுதி கழக செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. அறிக்கை விடுத்துள்ளார்.

### புத்தாண்டின் முதல் நாளில்

# முழு கொள்ளளவுடன் புழல் ஏரி!

புழல்,ஜன.2-

கடந்தாண்டு இறுதியில் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் தொடர் வடகிழக்கு பருவமழை காரணமாக, சென்னை நகர மக்களுக்கு குடிநீர் வழங்கும் புழல் ஏரி முழுமையாக நிரம்பி, அதன் உபரிநீர் அதிகளவில் வெளியேற்றப்பட்டது. பின்னர் மழை ஓய்ந்ததும், தற்போது வரை புழல் ஏரியின் மொத்த கொள்ளளவான 3300 மில்லியன் கனஅடியில் நீர் இருப்பு உள்ளது.

புழல் ஏரிக்கு தொடர்ந்து 215 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. இதில், சென்னை நகர மக்களின் குடிநீர் தேவைக்காக விநாடிக்கு 184 கனஅடி நீர் திறக்கப்பட்டு வருகிறது. கடந்த 24வது நாட்களாக புழல் ஏரி முழுவதுமாக நிரம்பி, இன்று ஆங்கில புத்தாண்டு தினம் வரை முழு கொள்ளளவுடன் நீடித்து, கடல் அலை போல் நீர் ததும்பி அழகுற காட்சியளித்து வருகிறது. இதன்மூலம் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு, இந்தாண்டு துவக்கத்தின் முதல் நாளில் புழல் ஏரி முழு கொள்ளளவுடன் நீடித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### நே.சிற்றரசு – எழிலன் நாகநாதன் – வினோத் வேலாயுதம் – சைதை சாதிக் பங்கேற்பு!

# 112 (அ) வட்டத்தில் ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’ கூட்டம்!

### வட்டச் செயலாளர் மு.மோகன் அறிக்கை!

சென்னை, ஜன.2-

ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 112 (அ) வட்டச் செயலாளர் மு.மோகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

சென்னை மேற்கு மாவட்டம் ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி 112 (அ) வட்டத்தில் உள்ள BLA-2 மற்றும் BLC, BDA, BYA ஆகியோர்களுக்கு பாகம் வாரியாக கீழே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணைப்படி என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாகம் 150, 151, 152, 156, 160, 167 ஆகிய பாகங்களுக்கு ஆலோசனை கூட்டம் 112 (அ) வட்டச் செயலாளர் மு.மோகன் (எனது) தலைமையில் இன்று (02.01.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 6.00 மணி அளவில் டிரஸ்ட்டுபுரம் 8 தெருவில் உள்ள விநாயகர் கோவில் அருகில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் நா.எழிலன், மேற்கு பகுதி கழகச் செயலாளர் வினோத் வேலாயுதம், தொகுதி மேற்பார்வையாளர் சைதை சாதிக் பங்கேற்கின்றனர்.

மேலும் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் புவி பாலாஜி, ஸ்டெர்லிங் மோகன், என். பி.இதயத் பாஷா, பொன்னம்மாள், 112 (அ) வட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதி அ.குப்பன், வழக்கறிஞர் அணி தலைவர் வேல்முருகன், மற்றும் வட்டக் கழக நிர்வாகிகள் அணிகளின், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், இளைஞரணி, மகளிர் அணி மற்றும் BLA2, BLC, BDA, BYA, அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு 112 (அ) வட்டச் செயலாளர் மு.மோகன் அறிக்கை விடுத்துள்ளார்.



பெருநகர் சென்னை மாநகராட்சி மண்டல 4 வார்டு 38 எண்ணூர் நெடுஞ்சாலையில் 38வது வார்டு உறுப்பினரும் மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் ஏற்பாட்டில் வண்ண நீரூற்று 8.20 லட்சம் செலவில் புதிதாக ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., திறந்து வைத்தார்.உடன் எஸ்.ஜெபதாஸ்பாண்டியன், ஏ.டி.மணி, மாஸ் டி.வெங்கடேசன், எம்.கோவிந்தராஜ், தேவன், ஏழுமலை, எஸ்.எம்.பரசுராமன், எம்.லோகநாதன், எஸ்.கிருஷ்ணன், சிவகுமார், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### என். பன்னீர் செல்வம் – என்.ஸ்ரீதர் தந்தை

# பம்மல் தெற்குப் பகுதி சி.நடராசன் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜன.2-

பம்மல் தெற்கு பகுதி துணைச் செயலாளர் என். பன்னீர்செல்வம் மற்றும் 8-வது வட்ட அவைத் தலைவர் என். ஸ்ரீதர் ஆகியோரின் தந்தையார் சி.நடராஜன் அவர்கள் நேற்று (01.01.26 வியாழக்கிழமை) இயற்கை எய்தினார் என்ற செய்தியை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

அவரின் குடும்பத்திற்கு பகுதி கழகம் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது இறுதி ஊர்வலம் அவரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு இன்று (02.01.2026 - வெள்ளிக்கிழமை) மாலை 3.00 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும்.

குறு-சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர் இ. கருணாநிதி, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர், தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, மாநகராட்சி மேயர் தாம்பரம் மாநகர கழக துணை செயலாளர் திருமதி.க.வசந்தகுமாரி, மாநகராட்சி துணை மேயர் தாம்பரம் மாநகர கழக அவைத் தலைவர் கோ.காமராஜ், பம்மல் வடக்கு பகுதி செயலாளர் த.ஜெயக்குமார் உள்ளிட்ட கழகத்தினர் அஞ்சலி செலுத்தினர்.

# வணங்குவதற்கு அடிக்கடி ‘கால்களை’ மாற்றும் எடப்பாடி பழனிசாமி!

திருப்போரூர், கும்மிடிப்பூண்டி ஆகிய கூட்டத்தில் பேசிய எடப்பாடி, “ரகுபதி என்று ஒருவர் இருக்கிறார். வேஷ்டியை மாற்றுபவர், அன்றைக்கு ஒரு எட்டப்பன், இன்றைக்கு ரகுபதி, துரோகத்தின் வடிவமாக இருக்கிறார்” என்று எடப்பாடி பேசியுள்ளார்.

“தான் திருடி பிறரை நம்பமாட்டாள்” என்கிற கதையாக, ஈயத்தை பார்த்து இளித்ததாம் பித்தளை என்கிற கதையாக பேசி இருக்கிறார்.

“அழகுக்கு மறுபெயர் பெண்ணா அல்லி மலருக்கு மறுபெயர் கண்ணா – தமிழுக்கு மறுபெயர் அமுதா” என்பதுபோல் துரோகத்துக்கு மறுபெயர் எடப்பாடிதான்.

முதலில் ஜெயலலிதா கால், சசிகலா கால், ஓ.பி.எஸ். கால், இப்போது மோடி, அமித்ஷா கால் என, விழுவதற்கு கால்களை அடிக்கடி மாற்றிக் கொள்பவர் எடப்பாடி, ரகுபதியின் குற்றச்சாட்டுக்கு பதில் கூறாமல் அவரை கட்சிமாறினார் என்று மட்டும் சொல்வது நியாயமா?

தந்தை பெரியார், காங்கிரஸ் மாநில தலைவராக இருந்த போது, கருத்து வேறுபாடால் திராவிடர் கழகம் ஆரம்பித்ததோடு, கருப்பு – சிவப்புக்கு மாறியவுடன், ஏன் மாறினீர்கள் என கேட்பது முட்டாள்தனமானது.

உதயசூரியனில் நின்று வெற்றி பெற்றுவிட்டு, கருப்பு சிவப்பு வேட்டியை உழைக்கும் கரங்கள், உரிமைக்குரல் படம் வரை கட்டிவிட்டு, கருப்பு, வெள்ளை, சிவப்பு கரை வேட்டி ஏன் கட்டினாய் என எம்.ஜி.ஆரை கேட்கமுடியுமா?

தனக்கு அடைக்கலம் தந்த சசிகலா அம்மையாரையே கட்சியை விட்டு நீக்கிய எட்டப்பன் துரோகி பழனிசாமி.

1989-ல் தனக்கு எம்.எல்.ஏ. சீட் பெற காரணமாக இருந்த நடராஜன் மரணத்திற்கு கூட தானும் செல்லாமல், அ.தி.மு.க. அமைச்சர்களையும், கட்சிக்காரர்களையும் போகவிடாமல் செய்த நன்றி கெட்ட எட்டப்பன் பழனிசாமி.

செங்கோட்டையனை முதல்வராக்க நினைத்திருந்த சசிகலா அம்மையாரிடம், தனக்காக பல கோணங்களில் பேசிப் புரிய வைத்து தன்னை முதல்வராக்கிய தினகரனை வழக்கில் மாட்டிவிட்டு, கட்சியை விட்டு தூக்கி வீசிய துரோகி எட்டப்பன்தான் எடப்பாடி.

தன்னை அரசியலுக்கு கொண்டு வந்த செங்கோட்டையனையே கட்சியை விட்டு நீக்கிய துரோகி பழனிசாமி.

தன்னை மெருகேற்றிய தலைவி ஜெயலலிதாவால் 5 ஆண்டு காலத்திற்கு சட்டமன்ற உறுப்பினராக பணிபுரிய அனுமதித்த 18 சட்டமன்ற உறுப்பினர்களின் இரண்டாண்டு பதவி பறிப்புக்கு காரணமாக இருந்த துரோகி எட்டப்பன் எடப்பாடி.

தினகரன் வெளியேறிய சூழலில் தனது 11 ஆதரவு எம்.எல்.ஏ.க்களின் ஆதரவுடன் வந்து, ஆதரவு தந்து, எடப்பாடி ஆட்சியை கவிழ்ந்து விடாமல் காப்பாற்றிய ஓ.பி.எஸ்.ஸை கட்சியை விட்டு நீக்கிய துரோகி எட்டப்பன்தான் பழனிசாமி.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
கழக வர்த்தகர் அணிச் செயலாளர்

37 எம்.பி.-க்கள் - தமிழக ஆட்சியுடன் வந்து பொறுப்பேற்று விட்டு, இன்று 0-வாக பத்து தோல்வி பழனிசாமி என்கிற பட்டத்துடன் அ.தி.மு.க. விற்கே துரோகம் செய்திட்ட எட்டப்பன் எடப்பாடி.

2024 நாடாளுமன்ற தேர்தல் வரை தேசிய ஜனநாயக கூட்டணியில் அங்கம் வகித்துவிட்டு, தேர்தலுக்கு சில வாரமே இருக்க, பா.ஜ.க.வை கழட்டிவிட்டு, பா.ஜ.க.வுக்கு துரோகம் செய்த எட்டப்பன் எடப்பாடி மற்றவர்களை சொல்வது, ஆலமரத்தைப் பார்த்து, காற்று அடித்தால் அடிக்கடி வளையாதே என நாணல் சொன்னது மாதிரி உள்ளது.

தேர்தல் நேரத்தில் வாக்குறுதி என்பது, ஆள்பாதி - ஆடைபாதி போல.

தேர்தலில் சொன்னது ஒன்றிரண்டு விடுபட்டும் போகலாம். சொல்லாத பல திட்டங்கள் செயலுக்கும் வரலாம்.

தங்கத் தளபதி கொண்டு வந்த 20 லட்சம் குழந்தைகளுக்கு காலை உணவு என்பது உலக வரலாற்றில் புதியது.

தாயுமானவர் திட்டம், வீடு தேடி மருத்துவம், நலன் காக்கும் ஸ்டாலின் என ஆஞ்சநேயர் வாலைக் காட்டிலும், திரௌபதி சேலையை காட்டிலும் ஒன்றிய அரசின் ஒத்துழைப்பே இல்லாமல் தமிழ்நாட்டில் புதிய புதிய திட்டங்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

தேர்தல் வாக்குறுதிகளுக்குத்தான் வாக்கு என்றால் நாங்கள் மகளிருக்கு, கலைஞர் மகளிர் உரிமைத்தொகையாக ரூபாய் ஆயிரம் வழங்குவதாக கூறிய 5 நாள் கழித்து அ.தி.மு.க. நாங்கள் வந்தால் ரூ. 1,500 தருகிறோம் என்றீர்களே மக்கள் உங்களுக்கா ஓட்டு போட்டார்கள்? தளபதிக்குத்தானே போட்டார்கள். சொல்வது பெரிது - சொல்கின்ற ஆளையும் பார்ப்பார்கள்.

தி.மு.க.வினர் “கூட்டணியை பற்றித்தானே சொன்னார்கள், எங்களைப் பற்றியா குறை சொன்னார்கள்” என்கிறார் எடப்பாடி.

நீங்கள் கார் மாறி, கார் மாறி முகத்தை மூடிக்கொண்டு அமித்ஷாவை பார்க்கப் போனதை நாங்கள் சொல்லவில்லையா?

சம்பந்தியைக் காப்பாற்ற, நெடுஞ்சாலை துறை காண்டிராக்ட் 4800 கோடி ரூபாய் ஊழல் வழக்கிற்காகத்தான் பா.ஜ.க. கூட்டணிக்கே சென்றீர்கள் என்று தி.மு.க. உங்களை நோக்கி சொல்லவில்லையா?

பரதேசிக்கு ‘பார்ப்பவனை எல்லாம் பரதேசி’ எனக் கூறத்தோன்றும். அதுபோல அமாவாசைக்குத்தான் எல்லாம் அம்மாவாசையாகத் தெரியும் என நாங்கள் உங்களை நோக்கிச் சொல்லவில்லையா?

அடுத்த கட்சியின் துண்டை தன் கட்சித் தோழருக்கு அணிவித்து வரச்சொல்லிவிட்டு கூட்டணி கண்ணுக்கு தெரிய ஆரம்பித்துவிட்டது என கூறிய மகா பெரிய மோசடிக்காரர் எடப்பாடி என நாங்கள் உம்மைப் பார்த்துச் சொன்னதில்லையா?

### மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டத்தில் தீர்மானம்!

# 2026-ல் கழகத் தலைவரை மீண்டும் தமிழ்நாட்டின் முதல்வராக்குவோம்!

### பகுதிக் கழகச் செயலாளர் புழல் எம்.நாராயணன் ஆலோசனை வழங்கினார்!

சென்னை, ஜன. 02

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டம் மாத்தூர் 19 வது வட்டம், ராகவேந்திரா திருமண மண்டபத்தில் மாதவரம் வடக்கு பகுதி அவைத் தலைவர் வி.திராவிடவீரன் தலைமையில் 19 வது வட்டச் செயலாளர் மாத்தூர் கா.தாமரைச்செல்வன் வரவேற்புரையில் வட்டக் கழகச் செயலாளர்கள் இ.கண்ணப்பன், கே. கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், கே.அங்குசாமி, கவுன்சிலர்கள் க. காசிநாதன், ஆ. ராஜேந்திரன், மாவட்ட வர்த்தக அணி தலைவர் மஞ்சம்பாக்கம் ஆர்.பாபு, மாவட்ட பிரதிநிதிகள் வி.கார்த்திகேயன், பா.சந்திரன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம்.நாராயணன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்களை பொறுப்பேற்க அல்லும் பகலும் அயராது உழைத்து பாடுபடுவது எனவும் அதற்காக வீடு வீடாக திராவிட மாடல் அரசன் சாதனைகளை துண்டு பிரசுரங்கள் மூலம் வழங்கி பொதுமக்களிடம் தெருமுனை கூட்டங்கள் நடத்தி வெற்றி பெற வைக்க அயராவது பாடுபடுவதென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை திராவிட பொங்கலாக கொண்டாட வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் அறிக்கையின்படி வட்டங்கள் தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பகுதி மற்றும் மாவட்ட அளவில் வீர விளையாட்டுகளை நடத்தி பரிசுகளை வழங்குவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்தில் எஸ். உதயகுமார், எஸ்.கோபாலகிருஷ்ணன், இரா.குகன், டி.கோவர்தனன், வக்கீல் டில்லி பாபு, து.எழில்குமார், மு.விக்னேஸ்வரன், சோ.சரவணன், வழக்கறிஞர் எம்.என்.அஜய் தென்னவன், ஜி.ராஜேஷ், கண்ணன், பி.முத்துகிருஷ்ணன், டி.பார்பன், சுதாகர், பெரியநாயகி, கஸ்தூரி, சரஸ்வதி, வக்கீல் ராஜா ராம், ஹரி சுப்பிரமணி, ரகுவரன் உள்ளிட்ட பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள் கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. ஆலோசனைக் கூட்டத்தில் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் தலைமையில் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் 2026 இல் மீண்டும் தமிழ்நாட்டின் முதலமைச்சராக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை பொறுப்பேற்க அயராது பாடுபடுவது எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பகுதி அவைத் தலைவர் வி.திராவிட வீரன் தலைமையில் மாத்தூர் கா.தாமரைச்செல்வன், இ.கண்ணப்பன், கே.கருணாகரன், பி.எஸ்.சந்துரு, வி.ஆர்.குப்பன், மஞ்சம்பாக்கம் பாபு, கவுன்சிலர்கள் க.காசிநாதன், ஆ.ராஜேந்திரன், வி.கார்த்திகேயன், பா.சந்திரன், எஸ். உதயகுமார், எஸ்.கோபாலகிருஷ்ணன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.